https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

27th AUGUST 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 42

## 344 வாகனங்கள் மிஸ்ஸிங்



02

# அமைச்சர்களுக்கு எதிராக களமிறங்கும்



# இராஜாங்க அமைச்சர்கள்

இராஜாங்க அமைச்சர்களுக்கான பொறுப்புக்கள் உரிய முறையில் பகிர்ந்தளிக்காமை காரணமாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் இடையில் இடம்பெற்று வந்த பனிப்போர் இப்போது

02



## எம்பிக்களின் 698 துப்பாக்கிகள் மாயம்

1980 ஆம் ஆண்டு முதல் இப்போது வரை எம்பிக்களின் பாதுகாப்புக்காக அவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் 698 துப்பாக்கிகள் மீள வழங்கப்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தகவலை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னங்கோன் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.மாத்தறை மாவட்ட எம்பி டலஸ் அழகப்பெருமவின் கேள்விக்கு பதிலாகவே இந்த அறிக்கை

02

## பகலில் சண்டை: இரவில் நட்பு



05









புது சுடர்
www.puthusudar.lk
2023 AUGUST 27 - SUNDAY

# இலங்கையில் ஐஎஸ்.ஐஎஸ்?

இலங்கையில் அரசியலில் வெல்ல வேண்டும் என்றால் அதற்கான முதலீடு இனவாதம்தான் என்றாகிவிட்டது.வாக்காளர்களின் பலவீனம் எதுவோ அதுதான் முதலீடு.

அந்த பலவீனமாக அரசியல்வாதிகள் பார்ப்பது இனவாதத்தை.இனவாதத்தைத் தூண்டிவிட்டால் இலகுவாக வென்றுவிடலாம் என்பது அரசியல்வாதிகள் கண்ட அனுபவம்.

அதனால் இனவாதத்தைத் தவிர வேறு ஒன்றை-நாட்டுக்குத் தேவையான ஒன்றை முதலீடாக -இவர்களால் தெரிவு செய்ய முடியவில்லை.

இனவாதத்தால் நாடு அழியுமே தவிர முன்னேறாது என்பது இந்த அரசியல்வாதிகளுக்குத் தெரியும்.நாடு முன்னேறுவது முக்கியமல்ல.இவர்கள்-இந்த அரசியல்வாதிகள் முன்னேற வேண்டும்.நாடு எக்கேடு கெட்டுப் போனாலும் இவர்களுக்குக் கவலை இல்லை.

அரசியல் என்பது சேவை அல்ல பிஸ்னஸ்.அந்த பிஸ்னெஸ்ஸை எப்படி வேண்டுமானாலும் செய்யலாம்.அந்த நிலைப்பாட்டில் இவர்கள் களமிறங்கி இருப்பதால் இனவாதத்தைக் கக்கி -நாட்டை சீரழித்து அரசியல் செய்கிறார்கள்.

தேர்தல் நெருங்கும்போதுதான் இவர்களின் ஆட்டம் உச்சம்கொள்ளும்.அதை இப்போதே காண முடிகிறது.ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வருடம் இருப்பதால் அதில் எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டும் என்பதால் அரச தரப்பு பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறது.

ஒரு பக்கம் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ற நாடகம்.இன்னொரு பக்கம் கட்சிகளை உடைத்து உறுப்பினர்களை வளைத்துப் போடும் நடவடிக்கை என அரசின்-ரணில் தரப்பின் தேர்தல் வியூகம் தொடர்கிறது.

அந்த வியூகத்தில் ஒன்று இப்போது புதிதாக இணைந்துள்ளது. அதுதான் ஐஸ்ஐஸ் பயங்கரவாதிகள்.

சிரியாவுக்குச் சென்று ஐஸ்ஐஸ் பயங்கரவாதிகளிடம் பயிற்சி முடித்த 20 இலங்கையர்கள் உள்ளனர் என்றும் உத்தரவு வந்தால் அவர்கள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்றும் வஜ்ஜிர அபயவர்தன எம்பி கூறியுள்ளார்.

இது பாரதூரமான கூற்று. அவ்வாறு அவர்கள் இல்லை என்றோ ,அல்லது இருக்கிறார்கள் என்றோ நாம் சொல்லவில்லை.வஜ்ஜிர கூறியது உண்மையென்றால் அவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

அப்படி இல்லாமல் சும்மா பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு தாக்குதல் ஒன்று நடந்த பின் அப்பாவி முஸ்லிம்களை தண்டிப்பதில் அர்த்தமில்லை.

இதுதானே நடந்தது ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில்.எல்லாம் தெரிந்துகொண்டும் சும்மா இருந்தார்கள்.இறுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது.அப்பாவி கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். அதற்காக அப்பாவி முஸ்லிம்கள் பழிவாங்கப்பட்டார்கள்.

வஜ்ஜிர ஐஸ் என்று கூறி -அதனூடாக சிங்கள மக்களை அச்சமூட்டி அந்த மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக இப்படிக் கூறுகிறாரா? அல்லது உண்மையில் ஐஸ் இருக்கிறார்களா என்று அறிய வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களுக்கு உண்டு. ஏனென்றால் தாக்குதல் ஒன்று நடந்தால் பாதிக்கப்படப்போவது அப்பாவி முஸ்லிம்கள்தான்.

ஈஸ்டர் தாக்குதலின் பின் பார்த்தோமே முஸ்லிம்கள் பட்ட கஷ்டத்தை.ஆகவே முஸ்லிம்கள் அந்த கசப்பான அனுபவத்தைக் கவனத்தில் கொண்டு இது தொடர்பிலான உண்மைத் தன்மையை அறிவதற்கு முற்பட வேண்டும்.முஸ்லிம் அரசியல்வாதிகள் அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

# உலக சாதனை படைத்த சவூதி அரேபிய பெண்ணின் போத்தல் மூடிச் சுவரோவியம்



(காலித் ரிஸ்வான்)

சவூதியின் சுற்றுச்சூழல் ஆர்வலர் குலூத் அல்-பழ்லி என்ற பெண், பசுமையான சவூதி அரேபியா என்பதை எடுத்துக் காட்டும் வகையில் 500,000 பிளாஸ்டிக் போத்தல் மூடிகளைப் பயன்படுத்தி 383 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட உலகின் மிகப்பெரிய சுவரோவியத்தை உருவாக்கி இரண்டாவது முறையாக கின்னஸ் உலக சாதனையை நிகழ்த்தி சவூதி அரேபியாவுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

பிளாஸ்டிக்கை மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்துவதன் மூலமும் குறைப்பதன் மூலமும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும் என்பதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட இந்த ஓவியத்தை உருவாக்க இவர் எட்டு மாதங்களை எடுத்துக் கொண்டுள்ளார். இந்தப் பணியில் இவருக்கு உதவியாக சவூதி அரேபியாவின் கிரீன் லீவ்ஸ் பாடசாலை மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டில், அல்-பழ்லி, ஜித்தாவில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முயற்சிகளில் ஒன்றாக, சவூதியின் விளையாட்டு அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட "பிளாஸ்டிக் மூடிகளை பயன்படுத்தி உலக வரைபடத்தை உருவாக்குதல்" என்ற திட்டத்தை கட்சிதமாக செய்து முடித்து உலகின் மிகப்பெரிய வரைபடமாக அதனை பதிவுசெய்தது கின்னஸ் சாதனை படைத்தார். 250 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்ட அவ்வுலக வரைபடம், 350,000 பிளாஸ்டிக் போத்தல் மூடிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.

அல்-பழ்லியின் இந்த சாதனைக்கான சான்றிதழ், கின்னஸ் உலக சாதனை அதிகாரிகள், ஜித்தா நகராட்சி அதிகாரிகள் மற்றும் பழ்லியின் குடும்பத்தினர், பாடசாலையை சார்ந்தவர்கள் மற்றும் மேலும் சில நபர்கள் கலந்து கொண்ட ஜித்தா கொர்னிச்சில் நடைபெற்ற சிறப்பு விழாவில் வழங்கப்பட்டது.

## 344...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நீர்ப்பாசன அமைச்சுக்குச் சொந்தமான 344 வாகனங்களைக் காணவில்லை என்று தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி அந்த அமைச்சுக்கு 650 வாகனங்கள் சொந்தமாக உள்ளன.இருந்தும்,பாவனையில் இருப்பது 306 வாகனங்கள் மட்டுமே.344 வாகனங்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.




## அமைச்சர்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உக்கிரமடைந்துள்ளது என்று அறிய முடிகிறது.

தமது பொறுப்புக்களை வர்த்தமானியில் அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருவதற்கு இராஜாங்க அமைச்சர்கள் தயாராகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொட்டு கட்சியைச் சேர்ந்த 20 இராஜாங்க அமைச்சர்கள் கடந்த வியாழக்கிழமை ஒன்றுகூடி மேற்படித் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

தமக்குரிய பொறுப்புக்கள் என்னவென்று இன்னும் சரியாக பிரித்துக்கொடுக்காததால் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் இடையில் நீண்ட காலமாக பனிப்போர் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## எம்பிக்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த வகையில் 157 அரசியல்வாதிகள் இவ்வாறு துப்பாக்கிகளை மீள ஒப்படைக்கவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.







# மாணவர்களை நிரந்தர நோயாளர்களாக மாற்றும் பாடசாலை உணவகங்கள்

தொடர் - 02

எம்.எல்.எஸ்.முஹம்மத்
lk.mlsmohamed@gmail.com

பற்றுச் சீட்டின்றி பணப் பரிமாற்றம் இடம்பெறுவதை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.இந்த விடயம் தொடர்பில் நாம் உரிய கவனம் செலுத்தி சம்பந்தப்பட்டுள்ள அனைவருக்கு எதிராகவும் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்க இருக்கின்றேன்", என அவர் பதில் அளிக்கிறார்.

மேற்படி பாடசாலையில் மாத்திரமின்றி இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 583 பாடசாலைகளில் 179 பாடசாலைகளில் மாத்திரம்தான் பாடசாலை உணவகம் நடத்தப்பட்டு வருவதாகக் 2020 ஆம் வெளியிடப்பட்ட முக்கிய மருத்துவ ஆய்வறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அவற்றில் 56 பாடசாலைகளில் மாத்திரமே பாடசாலை நிர்வாகம் உணவகப் பொறுப்பாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது எனவும் அவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

மேற்படி ஆய்வுக் கண்டுபிடிப்பை உண்மைப்படுத்தும் விதமாகவே இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலை உணவகங்கள் அமைந்துள்ளன.

குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள முக்கிய தமிழ் மொழி மூலப் பாடசாலையொன்றின் உணவகமும் இன்னும் அதன் ஆரம்ப நிலையிலேயே உள்ளதாக அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எம்.இஸ்திகார் தெரிவிக்கிறார்.

நாம் இது தொடர்பாக அப்பாடசாலையின் அபிவிருத்திக் குழு செயலாளரை தொடர்புகொண்டு கேட்ட போது,

“எமது பாடசாலை உணவகம் கடந்த பல வருடங்களாக கேள்வி மனுக்கோரல்கள் எதுவுமின்றியே தொடர்ந்து நடத்தப்பட்டு வந்துள்ளது.இதனால் உணவகப் பொறுப்பாளர்களுடன் ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவில்லை.

எம்.காதர் என்பவரே தொடர்ச்சியாக பல வருடங்கள் எமது உணவகத்தை நடத்தி வந்துள்ளார்.அவர் தொடர்பில் பல சிக்கல்கள் இருந்த போதிலும் அதிபர் அவரிடமே ஒப்படைத்து வந்தார்.

எனினும் பின்னர் எமது அழுத்தங்களைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கிணங்க புதிய ஒருவரிடம் உணவகத்தை ஒப்படைக்க முடிந்துள்ளது", என அவர் தெரிவிக்கிறார்.

எனினும் மேற்படி பாடசாலை உணவகமும் ஏனைய பாடசாலை உணவகங்களைப் போன்று போதிய வசதிகள் எதுமற்ற மாப்பொருள் உணவுகளையே அதிகமாக விற்பனை செய்யும் உணவகமாகவே உள்ளது.

அத்துடன் இதன் புதிய பொறுப்பாளர் கேள்வி மனுக்கோரல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் அவரை விடவும் கூடுதலான நாளந்த உணவுக் கட்டணத்தை வழங்க முன்வந்திருந்த மூவரின் விண்ணப்பங்கள் அதிபரின் தீர்மானத்திற்கிணங்க நிராகரிக்கப்பட்டன என அப்பாடசாலையின் தகவல் தொடர்பு அதிகாரி பிரதி அதிபர் தெரிவிக்கிறார்.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி பாடசாலை அதிபரை தொடர்புகொண்டு கேட்டபோது

“கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்கவே எமது உணவக புதிய பொறுப்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிய பொறுப்பாளரை விடவும் கூடுதலான தினக் கட்டணத்தை குறிப்பிட்டு பலர் விண்ணப்பித்திருந்தனர்.

எனினும் அவர்கள் சமர்பித்திருந்த உணவுப் பண்டங்களின் விலைப் பட்டியல் மற்றும் அவர்கள் சமூகத் தொடர்பாடல்கள் எமது பாடசாலை கலாச்சாரத்திற்கு பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை.இந்நப் பின்னணியுடன்தான் அவர்களின் விண்ப்பங்கள் நிராகரிக்கப்பட்டன", என அவர் தெரிவிக்கிறார்.

மேற்படி இரத்தினபுரி பாடசாலையில் இரவு நேர பாதுகாவலராகவும், கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக அப்பாடசாலையின் உணவக பொறுப்பாளராகவும் செயற்பட்டு வந்த காதரிடம் நீங்கள் ஏன் பாடசாலைக்குரிய உணவக கட்டணத்தை வழங்காமல் சட்ட விரோதமாக செயற்பட்டுள்ளீர்கள் எனக் கேட்ட போது அவர் இவ்வாறு பதில் தருகிறார்.



“நான் இப்பாடசாலையின் பாதுகாவலராகவே இணைந்தேன்.இப்பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக பல அச்சுறுத்தல்கள் வந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் நான் அவற்றை சமாளித்து பாடசாலையை பாதுகாத்துள்ளேன்.என்மீது அதிபர் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

இந்தப் பின்னணியுடன்தான் பகல் நேரங்களில் பாடசாலை உணவகத்தை நடத்திச் செல்ல அவர் எனக்கு அனுமதி அளித்தார்.ஆரம்ப காலங்களில் கட்டணம் இன்றி உணவகத்தை நான் நடத்தி வந்த போதிலும் பின்னர் ஐநூறு ரூபா என்ற அடிப்படையில் கட்டணம் செலுத்தி வந்தேன்",என அவர் தெரிவிக்கிறார்.

மேற்படி இரத்தினபுரி பாடசாலையில் மாத்திரமின்றி இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பல கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பாடசாலை உணவகம் வெறும் பெயளவில் மாத்திரம்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

கேள்வி மனுக்கோரல்கள் எதுவுமின்றி அதிபரின் சொந்த விருப்பத்திற்கிணங்க நடத்தப்படும் இவ்வுணங்கள் பற்றி இரத்தினபுரி மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.மன்சூர் தனது கருத்தை இவ்வாறு முன்வைக்கிறார்.

“மாணவர்களுக்கு ஊட்டச் சத்துமிக்க ஆரோக்கியமான உணவுப் பண்டங்களை மாத்திரம் மாணவர்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய பாடசாலை உணவகங்கள் வெறும் இலாபத்தை மாத்திரம் கருத்திட்கொண்டு செயற்பட்டு வருவததால் மாணவர்கள் சிறுவயதிலேயே நிரந்தர நோயாளர்களாக மாற்றப்படுகின்றனர்.

பாடசாலை அபிவிருத்திக் குழுவின் நேரடி கண்காணிப்புடன் செயற்படுத்தப்பட வேண்டிய இவ்வுணவகங்களை பொறுப்பேற்று நடத்துவோர் மத்தியில் எந்த சுகாதார பழக்க வழக்கங்களும் இல்லை. பாடசாலை அதிபர்கள் உணவகங்கள் ஊடாக வருமானம் திரட்ட முயற்சிக்கின்றார்களே அன்றி இதனை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கத் தவறுகின்றனர்",என அவர் குற்றம் சுமத்துகிறார்.

மேற்படி பொதுச் சுகாதார பரிசோதகரின் கருத்தை உண்மைப் படுத்தும் வகையிலே உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் அப்துல் றஹீம் சித்தீக் மற்றும் யனிஸெப் நிறுவனம் உட்பட அரச சார்பற்ற பல தொண்டர் நிறுவனங்களும் பாடசாலை உணவகங்களின் தற்போதைய பின்தங்கிய நிலைமை தொடர்பில் பாரிய அச்சத்தை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை பாடசாலை மாணவர்கள் மத்தியில் 10 சதவீத நிரந்த நோயாளர்களை உருவாக்கும் பாடசாலை உணவுப் பொறிமுறையை சீராக்கம் செய்ய அரசு முன்வர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் நுவரெலிய மாவட்டத்திலுள்ள நூனுஓயா பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றைச் சேர்ந்த 26 மாணவர்களும்,கிளிநொச்சி பாடசாலையொன்றின் 12 மாணவர்களும் மற்றும் சில தென்னிலங்கை பாடசாலைகளைச் சேர்ந்த 8 மாணவர்களும் பாடசாலையில் பரிமாறப்பட்ட உணவு நஞ்சாகியதால் அரச வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என தேசிய ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

இரத்தினபுரி மாவட்ட பாடசாலை உணவகங்களில் தொடரும் மேற்படி உள்ளக முரண்பாடுகள் தொடர்பாக சபரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தின் பாடசாலை உணவக செயற்திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.ஜே.யு.பி. கொடிகார கருத்து தெரிவிக்கையில்

“கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு முரணாக பாடசாலை உணவகங்களை நடத்திவரும் அதிபர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவர்களுள் கேள்வி மனுக்கோரல் இன்றியும்,உணவகப் பொறுப்பாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளாமலும்,உணவக கட்டணங்களில் மோசடிகளில் ஈடுபட்டோர் தொடர்பான சில முறைப்பாடுகளும் உள்ளன.இது தொடர்பாக ஆராய்வதற்கு கணக்காய்வு பரிசோதகர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர் பல தரப்பினரிடமிருந்தும் உரிய வாக்கு மூலங்களை பதிவு செய்து வருகின்றனர்.விரைவில் அவர்களது இறுதி அறிக்கை கிடைக்கப் பெற்றதும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்", என அவர் தெரிவிக்கிறார்.





தொடர் 15

# பிரபாவின் இறுதி நிமிடம்...!!

ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

# பிரபாகரனைக் காப்பாற்றுவதற்காக வந்த கெப்டன் அலி! சிக்கியது இப்படித்தான்...

போரின் இறுதிக் கட்டம்...

எப்படியாவது போரை நிறுத்தியாக வேண்டும்பிரபாகரனைக் காப்பற்றியாக வேண்டும்.

துடியாய்த் துடிக்கின்றன மேற்கு நாடுகள்.

அந்நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வந்ததும்மஹிந்தவை மிரட்டியதும் நாம் அறிந்ததே..

முன்னைய தொடரில் எழுதியுள்ளேன்.

அந்த முயற்சி தோல்விதான் அந்நாடுகளுக்கு.

இருந்தாலும், கைவிடவில்லை முயற்சியை...

வகுக்கின்றன பல திட்டங்களை...

அவற்றில் ஒன்றுதான் "கெப்டன் அலி".

யார் இந்த கெப்டன் அலி ?

கெப்டன் அலி என்பது ஒரு மனிதன் அல்ல. ஒரு கப்பல்.

ஐரோப்பிய நாடு ஒன்றின் கப்பல்.

அக்கப்பல்தான் தயாராகிறது பிரபாவைக் காப்பாற்றுவதற்கு...அங்கு அழைத்துச் செல்வதற்கு...

ஐரோப்பிய நாடு ஒன்றின் இறுதி முயற்சி. பிரபாவைக் காப்பாற்றும் இறுதி முயற்சி.

வெளியாகிறது இப்போது அங்கிருந்து...

கிட்டுகிறது இத்தகவல் கடற்படைக்கு...

தயாராகிறார்கள் அக்கப்பலை அழிப்பதற்கு...

இலங்கையை நெருங்கினால் கதை சரி.

எதிர்பார்ப்பில் கடற்படை.

ஆனால், காணோம்.

வெளியாகிறது இச்செய்தி பத்திரிகைகளிலும்...

முடிகிறது யுத்தம்.இந்நிலையிலேயே ...!!!

மே 18 இல் எல்லாம் ஓவர். 19இல் பிரபாவும் சரி.

அதன் பின் அலி வந்தும் பயனில்லை.

இந்நிலையில் ஒரு வர்த்தகக் கப்பல்.

செல்கிறது ஜோர்தானின் அகபா துறைமுகத்தை நோக்கி...

அங்கிருந்து சிங்கப்பூர் செல்லும் பயணம்.

அக்கப்பலில் ஒரு கெப்டன். அவர் இலங்கை நாட்டவர். கயான் குணதிலக.

அக்கப்பல் இலங்கையை கடக்கும்போது கப்பல் என்ஜினியர் ஒருவர் தயாராகிறார் அதில் ஏறுவதற்கு.அக்கப்பலின் என்ஜினியர் அவர்.

அவரிடம் சொல்கிறார் கயான் கடந்த நாட்களின் பத்திரிகைகளை எடுத்து வருமாறு. போர் செய்திகளை வாசிப்பதற்காக.

அவ்வாறே செய்கிறார் அந்த என்ஜினியர். ஏறுகிறார் பெரிய பத்திரிகைக் கட்டோடு...

எல்லாவற்றையும் வாசிக்கிறார் கயான். ஆர்வத்தோடு...

அப்போது கண்ணில் படுகிறது ஒரு செய்தி. முன் பக்கத்தில்...

அதுதான் கெப்டன் அலி பற்றிய செய்தி.

வருகிறது அக்கப்பல். ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து.பிரபாவைக் காப்பாற்றுவதற்காக...

ஆனால், இச்செய்தியை வாசிக்கும்போது எல்லாம் சரி.

போரும் சரி. பிரபாவும் சரி.

அக் கப்பல் சுவிஸ் கால்வாயை அண்மிக்கும்போதே போர் ஓவர்.

அப்படியென்றால் கப்பலுக்கு என்ன நடந்தது...?

இலங்கைக்கு வருமா ...? இல்லையா...?

எத்தகவலும் இல்லை கடற்படைக்கு...

ஆனால்,அதைக் காணும் ஆர்வத்தில் கயான்.

ஏன் தெரியுமா...?

அவரது கப்பல் செல்லும் பாதையில்தான் கெப்டன் அலியும்...இலங்கைக்கு செல்லும் வழி அதுதான்.

உஷாராகிறார் கெப்டன் கயான்.கெப்டன் அலியைப் பார்ப்பதற்கு...

கெப்டன் அலியின் அளவைப் பார்க்கிறார் கயான் அந்த பத்திரிகையில்.அதை வைத்தே கணிக்கிறார் அலியின் வேகத்தை.

இவர்களது கப்பலை விட பல மடங்கு வேகம் குறைந்தது.

இவர்களது கப்பல் வர்த்தகக் கப்பல்.அதி வேகக் கப்பல்.

கயானின் கப்பல் இப்போது அகபாவில் இருந்து சிங்கப்பூருக்கு...

கெப்டன் அலியின் அளவுக்கு ஏற்ப-அதன் வேகத்துக்கு ஏற்ப அது எப்படியும் இவரின் கண்ணில் படும்.கயானின் கப்பலை கெப்டன் அலி முந்தி இருந்தால்.

முந்தாவிட்டால் சந்திக்க முடியாது. காரணம்.அக்கப்பலைவிட இவர்களின் கப்பல் வேகமானது.முன்னோக்கியே சென்றுவிடும்...

கப்பலில் ஒரு சிஸ்டம் உண்டு. AIS .Automatic Identification System தான் அது.

VHF எல்லைக்குள் நிற்கின்ற கப்பல்களின் பெயர்கள்,போய்ச்சேரும் இடம் எல்லாம் விழும் அதில்.

"அப்படி வீழ்ந்தால் உடனே என்னிடம் சொல்லுங்கள்."

சக கெப்டன்களுக்குக் கூறுகிறார் கயான்.

இப்போது நுழைகிறது கப்பல் ஆபத்தான எல்லைக்குள். கடல் கொள்ளை இடம்பெறுகின்ற பகுதிக்குள்.

Gulf of Aiden பகுதி அது.

இதனால் அதிகரிக்கிறது கப்பலின் வேகம். கடும் வேகம்.கடற்கொள்ளையர்களிடம் இருந்து தப்புவதற்காக..

அது காலை 9 மணி...

சோதிக்கிறார் கயான் அந்த AIS முறைமையை வழமைபோல்...

அதிர்ச்சி – மகிழ்ச்சி அவருக்கு.

ஆம்... அவர் எதிர்பார்த்தது அங்கே...!!!

அதுதான் "கெப்டன் அலி."..!!! Gulf of Aiden பகுதியில்...

அதன் இறங்குதுறை கொழும்பு.எனக் காட்டுகிறது AIS இல் ...

கப்பலை திருப்புகிறார் மெல்ல. பின்தொடருகிறார் அலியை...

முந்துகிறார் 180 மீற்றர் இடைவெளியில். சந்தேகம் வராதபடி...

படம் பிடிக்கிறார் அங்கிருந்து...அதே இடைவெளியில்...

இப்போது கடற்படைக்கு அறிவிக்க வேண்டும்.

அக்கப்பல் இலங்கையை அண்மித்தால் அழித்தொழிப்பதற்குத் தயாராக கடற்படை.

ஆனால், அதுபற்றிய தகவல் இல்லை.

திரும்பிவிட்டதா...? அல்லது இடையில் நிற்கிறதா...? எதுவும் தெரியாது கடற்படைக்கு.

கடற்படையில் ஒரு நண்பன்.கெப்டன் கயானுக்கு...

அவரிடம் சொல்கிறார் விடயத்தை.தான் கண்ட காட்சியை...

அவருக்கோ அதிர்ச்சி...!!!

நண்பருக்கு அனுப்புகிறார் போட்டோக்களை. அலியின் போட்டோக்களை.

கூடவே ஒரு ரிப்போர்ட்.

அது எங்கே நிற்கிறது.எத்திசையை நோக்கிச் செல்கிறது போன்ற விவரங்களை உள்ளடக்கி...

அவர் பார்த்தது மே 29 இல்.

பிரபாகரன் கொல்லப்பட்டு 10 நாட்களுக்குப் பிறகு.

கடற்படை உயர் மட்டத்துக்கோ டென்ஷன் இதைக் கேட்டதும்...

யார் அந்த கெப்டன் கயான் குணவர்தன...? இவர் சொல்வது உண்மைதானா...? நம்பலாமா...? நம்பி களத்தில் இறங்கலாமா...?

ஏகப்பட்ட குழப்பம் அவர்களுக்கு...

மறுநாள் காலை...கயானைத் தொடர்புகொள்கிறார் நண்பர்.

"இரவெல்லாம் தூக்கமில்லை. கோலுக்கு மேல் கோல். உங்களைப்பற்றியே விசாரிக்கிறது நேவி."

நடந்தவற்றை விவரிக்கிறார் நண்பர்.

சந்தேகம் என்றால் உயர் அதிகாரிகளை தொடர்புகொள்ளச் சொல்கிறார் கையான்.

அப்படியே செய்கிறார்.

கோல் எடுக்கிறார்கள் நேவி உயர் அதிகாரிகள் கயானின் கப்பலுக்கு...

ரியர் அட்மிரல் மற்றும் வைஸ் அட்மிரல் ஆகிய இருவரும்...

கண்ட காட்சியை அப்படியே ஒப்புவிக்கிறார் கயான்.

நன்றி கூறுகிறார்கள் உயர் அதிகாரிகள்.

அதன் பின் நடந்தது என்ன...?

களத்தில் இறங்குகிறது கடற்படை.

சக்ஸஸ்....!!!

நீங்கள் படத்தில் காணும் கப்பல்தான் கெப்டன் அலி.கெப்டன் கையானும் கூடவே..!!!

இத்தோடு முடிகிறது இத்தொடர்.

சந்திப்போம் மீண்டும் ஒரு தொடரில்...புதுத் தொடரில்...!!!



அது காலை 9 மணி...
சோதிக்கிறார் கயான் அந்த AIS முறைமையை வழமைபோல்...
அதிர்ச்சி-மகிழ்ச்சி அவருக்கு.
ஆம்..அவர் எதிர்பார்த்தது அங்கே...!!!
அதுதான் "கெப்டன் அலி."..!!! Gulf of Aiden பகுதியில்...
அதன் இறங்குதுறை கொழும்பு.எனக் காட்டுகிறது AIS இல் ...
கப்பலை திருப்புகிறார் மெல்ல.பின்தொடருகிறார் அலியை...

# அமெரிக்காவில் இருந்து பசிலுக்கு சட்டை - மாத்திரைகள்
## கொண்டு வந்த லான்சா

நிமால் லன்சா ஓரிரு நாட்களுக்கு முன் அமேரிக்கா சென்று திரும்பினார்.அவர் வரும்போது பசில் ராஜபக்சவுக்கு மாத்திரைகளும் இரண்டு சட்டைகளும் கொண்டு வந்தாராம்.ஷ

அந்த மாத்திரையும் சட்டைகளும் அவர் பணம் கொடுத்து வாங்கவில்லை.தந்தையிடம் கொடுக்குமாறு அமெரிக்காவில் வசிக்கும் பசிலின் மகள் கொடுத்தாராம்.

பசிலின் மகள் அமெரிக்காவில் வைத்தியராக பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.



துப்பறிவாளன்


# சிக்கலில் எம்பியின் மருமகன்

தரமற்ற மருந்து பொருட்களின் இறக்குமதி தொடர்பில் இப்போது அதிகம் கதை அடிபடுகிறது.அதிலும் எதிர்க்கட்சிகள் இதற்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்துள்ளன.

இப்படி இருக்கையில் அரச தரப்பில் அதிர்ச்சியான தகவல் ஒன்று கிளம்பியுள்ளது அது எதிர்க்கட்சி எம்பி ஒருவரின் மருமகன்தான் அதிகமான தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்துள்ளார் என்பதுதான் அந்தத் தகவல்.

அவர் குருநாகல் மாவட்டத்தை சேர்ந்த எம்பியாம்.

இது தொடர்பில் அரசு நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்துவதற்கும் சிஐடியில் முறைப்பாடு செய்வதற்கும் திட்டமிட்டுள்ளதாம்.





# பகலில் சண்டை: இரவில் நட்பு

ஓரிரு நாட்களுக்கு முன் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றம் சென்றபோது அவரது கட்சி உறுப்பினர்கள் சிலர் அவரை அங்கு வரவேற்றனர்.

அவர்கள் லிப்டில் ஏறும்போது ஜோன் செனவிரத்ன எம்பியும் அவர்களுடன் சேர்ந்துகொண்டார். அதற்குள் வைத்தே உரையாடல் இடம்பெற்றது.

“சேர்..நீங்க ஜனாதிபதியாக இருந்த காலத்துல ஜோன் மின்சக்தி அமைச்சராக,சுகாதார அமைச்சராக இருந்து நல்ல வேலை செய்தார்..” என்று கூறினார் எம்பி ஒருவர்.

“ஓம்...ஓம்..குடுத்த வேல எல்லாத்தையும் அழகா செஞ்சி முடிச்சார்.” என்று கூறிய மஹிந்த “பவித்ரா உங்களுக்கு சொந்தம்தானே..? என்று ஜோனிடம் கேட்டார்.

ஒருவகையாக சிரித்துக்கொண்டு அதற்கு அந்த சிரிப்பாலேயே பதில் வழங்கினார் ஜோன்.

அத்ற்கு இன்னொரு எம்பி குறுக்கிட்டு “சேர்..மாமாவும் மருமகளும் பகல் நேரத்துல சண்ட.இரவில நற்பு. நாம பாக்கும்போது ரெண்டு பேரும் சண்ட..” என்றார்.

உடனே எல்லோரும் வீழ்ந்து வீழ்ந்து சிரித்தார்கள்.



# பசிலுக்கு அனுப்பிய கோபமான செய்தி



சில நாட்களுக்கு முன் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் பிரியங்கர ஜயரத்ன ஆகிய இருவரும் நாடாளுமன்ற வீதியில் நடைப் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியால் சென்ற ரஞ்சித் பண்டார எம்பி வாகனத்தை நிறுத்தி இவர்களுடன் உரையாடினார்.

“பசில் சேரும் நானும் உங்கள பத்திதான் பேசினோம்..“ என்றார் ரஞ்சித்.

அப்படி என்ன பேசினீர்கள் என்று கேட்டார் பிரியங்கர.

“மாவட்டத் தலைவர் பதவி கொடுக்கும்போது கட்சியோடு நீண்ட காலம் இருந்தவர்களுக்கு குடுக்கணும் என்று பேசினோம்..“ என்றார்.

இதைக் கேட்டு கடுப்பாகிப் போனார் அனுர.

“நீங்கதானே எங்கயோ இருந்தவர்களுக்கு எல்லாம் பதவி குடுத்தீங்க.அதாலதானே நிறய பேர் கட்சிய உட்டு போன.பசில்ட்ட போய் சொல்லுங்க..“

கோபமாய் கூறினார் அனுர.

அதற்கு எந்த பதிலும் வழங்கவில்லை ரஞ்சித்.

# மஹிந்தவின் பெட்டி படுக்கைகளை தயார் செய்த பிரசன்னவின் குடும்பம்



2015 ஜனாதிபதி தேர்தலில் தேர்தல் முடிவு வெளியாகி முடிந்த அன்று காலையே அலரிமாளிகைக்கு முதன்முதலாக ஓடிச் சென்றது அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் அவரது குடும்பமும்தானாம்.

தோல்வியடைந்துவிட்டார் இனி அலரிமாளிகையை விட்டு வெளியேற வேண்டும் மஹிந்த.அவரது பெட்டி,படுக்கைகள் எல்லாவற்றையும் ரெடி பண்ண வேண்டும்.

அந்த ஏற்பாட்டை கூடவே நின்று செய்தவர்கள் பிரசன்ன,அவரது மனைவி,பிள்ளைகள்தானாம்.

# முகத்தைத் திருப்பிய மஹிந்த



அரசியல் பிரமுகர் ஒருவரின் மகளின் திருமணம் ஒன்று அண்மையில் ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட பல அரசியல் புள்ளிகள் அதில் கலந்துகொண்டனர்.

அந்த நிகழ்வில் ஜனாதிபதியைச் சுற்றி ஒரே மேசையில் அமர்ந்துகொண்ட அரசியல் புள்ளிகள் அரசியல் பேச்சைத் தொடங்கினர்.

அப்போது அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்ப்பற்றியும் பேச்சு அடிபட்டது.

மொட்டு கட்சி 3 எழுத்துக்களைக் கொண்ட ஒருவரை வேட்பாளராக நிறுத்தப் போகுதாமே என்றார் ஜனாதிபதி.

அந்தக் கதை எழும்போது அருகில் இருந்த மஹிந்த அதற்கு பதில் வழங்காமல் மறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

# சந்திரிக்காவின் மகன் அரசியலில்...?



சில நாட்களுக்கு முன் சந்திரிகா அம்மையாரின் மகன் விமுக்தி நாட்டுக்கு வந்திருந்தார்.அப்போது அவர் சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

இது விமுக்தி அரசியலுக்கு வருவதற்கான நகர்வா என்ற கேள்வி எழுகிறது.இது தொடர்பில் விமுக்தியிடம் கேட்டபோது அவர் மறுத்துள்ளார்.

விமுக்தியை அரசியலுக்கு கொண்டு வருவதற்கு ஒரு தரப்பு நீண்ட காலமாக முயற்சி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யுத்தங்களின் போக்கில் மௌனாயுத யுத்தம்



- சின்னத்தம்பி குருபரன் -



மனிதன் அமைதி, சாந்தி, சமாதானம், ஒற்றுமையாகவே வாம விரும்புகிறான். ஒற்றுமையான வாழ்க்கைக்கு விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு ஆகியன அவசியமாகின்றது. இந்த அமைதியான வாழ்க்கை என்பது நம்நாட்டில“ கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கிறது.

அரசியல்வாதிகள், மதவாதிகள், உயர் அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக இலஞ்சம், ஊழல், கலப்படம், பதுக்கல், மோசடி, மதவாதம், இனவாதம், மொழி, பிரதேச வாதம் ஆகியன வேரூன்றி அழுக்காகி நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது. இவ்வாறான நாடு பலவீனமுற்று இருக்கும் போது அப்பலவீனத்தைத் தமக்குச் சாதகமாகக் கொண்டு பலரும் உள்நுழைவர். இவ்வாறான சூழ்நிலையிலேயே நாட்டில் மௌனாயுத யுத்தம் தடம்பதிக்க ஆரம்பிக்கும்.

உலகின் தொழினுட்ப விஞ்ஞான வளர்ச்சி யுத்தங்களின் போக்கில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. அந்த வகையில் ஆயுத யுத்தம், உயிராயுத யுத்தம், மௌனாயுத யுத்தம் ஆகியன உலகில் பிரபல்யம் பெற்றயுத்தங்களாகக் கொள்ளப்படுகின்றன.



மௌனாயுத யுத்தமானது நாட்டு மக்களின் நேரடி வாழ்க்கையோடு அல்லாமல் மறைமுகமாக அவர்களின் உடல், உள, வாழ்வியல் பொருளாதார அனைத்து அம்சங்களோடும் பின்னிப் பிணைந்து குடும்பம், சமூகம், நாடு என்று எமது வாழ்க்கையை மெது மெதுவாக அழித்துக் கொண்டிருக்கும். அதன் விளைவுகளை இலங்கை போனற இஸ்திரமற்ற நாடுகள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு நாட்டு மக்கள் அமைதியாகவும் தன்னிறைவுடனும் சந்தோசம், மகிழ்ச்சி, நின்மதியோடு வாழ வேண்டுமெனில் அந்நாட்டில் உறுதியான அரசியல், பொருளாதார, வெளியுறவு, வர்த்தகக் கொள்கைகள் காணப்பட வெண்டும்.

இத்தகைய நாடுகளில் வெளியாரின் தலையீடுகள் உள்நாட்டுக் குழப்பங்கள், போராட்டங்கள், கலகங்கள், உள்நாட்டுப் போர் ஆகியன காணப்பட மாட்டாது. ஒரு நாட்டில் அரசியல், பொருளாதாரம், கல்வி, வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம், வெளியுறவுக் கொளகை, இறை மற்றும் நாணயக் கொள்கைகள் உறுதியானதாக இருக்க வேண்டும்.

இத்தகைய கொள்கைகள் ஒன்றிலுமெ உறுதித் தன்மை பேணப்படாத நாடு இலங்கையாகும். அரசியல்வாதிகளின் போக்கிற்கு இணங்க சகல கொள்கைகளும் உறுதியற்று மாறிக் கொண்டே இருக்கின்றன.

இலங்கையில் நீதி, சமத்துவம், ஐக்கியம், இன நல்லுறவு, புரிந்துணர்வு ஆகியன இல்லாமையின் காரணமாக 30 வருடகால உள்நாட்டு யுத்தம் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாழ்வியல் அம்சங்களைச் சீரழித்திருக்கின்றன.

உள்நாட்டு யுத்தத்துடன் சுனாமி, கொரொனா ஆகியன அரசியல் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்து நாட்டினை அதலபாதாளத்துக்குக் கொண்டு சென்றிருக்கிறது. உள்நாட்டு யுத்தம் நடந்து அது மௌனிக்கப்பட்ட நாட்டில், யுத்தம் நடந்த பிரதேசங்களில் மக்களின் வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட அடிப்படையான பல அம்சங்கள் சிதைக்கப்படடிருக்கும்.

அப்பிரதேசங்களில் தடைகள், கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்த மக்கள் யுத்தம் மௌனிக்கப்பட்டதும் கட்டுக்கலைந்து கிளர்ந்தெழுவது இயல்பானதாகும். யுத்தச் சூழலில் அகப்பட்ட மக்களிடத்திலுள்ள யுத்த வடுக்கள் சீர்செய்யப்படுவதற்குப் பல தசாப்தங்கள் செல்லும் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

அதற்கிடையில் அரசும் படையினரும் அதன் பணியாளர்களும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது பொல் மெதுமெதுவாக அவ்வினக் குழுமத்தின் தேசியம், தனித்துவம் ஆகியவறடறைச் சிதைத்துப் பலவீனப்படுத்தி இருப்பார்கள்.

ஒரு நாட்டுக்கு யார் தலைவராக வரவேண்டும், எந்தக் கட்சி ஆட்சி அமைக்க வேண்டும், நாட்டின் அரசியல், பொருளாதாரம், நிதி, கல்வி, வெளியுறவு, வர்த்தகம், சென்மதி நிலுவை ஆகிய கொள்கைகளையும் நாம் உண்பது, அணிவது, குடிப்பது:, இரசிப்பது, பார்ப்பது, பொருளைத் தெரிவு செய்வது, வங்கிகள் கடன் வழங்குவது, வட்டி வீதத்தை நிர்ணயிப்பது, நுண் கடன்கள், கடன் அட்டைகள், நமக்கு வரத்தக்க நோய்கள், அதற்கான மருந்துகள், பழக்க வழக்கங்கள், விளம்பரப்படுத்தல், சந்தைப்படுத்தல், போட்டி உருவாக்கம், நாடுகள் வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், தொழில் வாய்ப்பு ஆகியவற்றை நாம் தீர்மானிப்பதில்லை இதனை இலுமினாட்டிகளும் பலம்பொருந்திய நாடுகளும், பல்தேசியக் கம்பனிகளும் தீர்மானிக்கின்றன.

இவை தமது கொள்கைகள் திட்டங்கள், சித்தாந்தங்கள் ஆகிய மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாடுகளைப் பயன்படுத்துகின்றன. இவர்களிடம் அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும நாடுகள், மூன்றாம் உலக நாடுகள் என்ற வகையிலும் உள்நாட்டுப் போர், கலவரங்கள், உள்நாட்டுக் கலகங்கள், போராட்டங்கள், கிளர்ச்சிகள், வன்முறைகள், இன. மத, மொழி. ரீதியாகப் பிளவுபட்டுக் காணப்படுகின்ற நாடுகளுக்கு ஏற்றவாறு திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இவை மறைமுகமாக மௌனமாக மெல்லக் கொல்லும் விசம்போல் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. காலப்போக்கில் மனித குலத்தின் இருப்பையே ஆட்டம் காண வைக்கும். இத்தகைய செயற்பாட்டினையே மௌனாயுத யுத்தம் எனக் கூறுகின்றனர்.

இரண்டாம், மூன்றாம் உலக நாடுகள் இதன் கோரப் பிடிக்குள் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் அதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலையகத்திலும் இதன் பாதிப்பு வேகமாக நடந்து கொண்டிருக்கிறது.

வடக்குக் கிழக்கில் 2009 இல் உள்நாட்டு யுத்தம் மௌனிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை 70 க்கு மேற்பட்ட மதுபான நிலையங்கள் (உல்லாச விடுதிகள் உள்பட) தாபிக்கப்பட்டுச் சிறுவர் முதல் பெரியோர் வரைத் திட்டமிட்டுப் பெருங்குடி மக்களாக்கியுள்ளனர்.

இதனால் கொலைகள், குடும்பப் பிரச்சினைகள், பாலியல் வன் கொடுமை, களவு, வாள் வெட்டுக்கள் போன்ற சமுதாயச் சீரழிவுகள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் போதைப் பொருள் (கஞ்சா, கெரோயின், ஐஸ் வகைப் போதைப் பொருள், கொக்கெயின்) கடத்தல், அதன் பாவனை ஆகியன அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனால பெரும்பாலான இளைஞர், யுவதிகளின் வாழ்கை சீரழிந்து கொண்டிருக்கின்றன. அத்தோடு பாரம்பரிய மனைமாட்சிப் பொருளாதாரத்தையும் சுயசார்புப் பொருளாதாரத்தையும் சீரழிக்கவென நுண்கடன் திட்டங்கள், லீசிங் வசதிகள், வங்கிகளுக்கூடான இலகுகடன் திட்டங்கள், கடன் அட்டைகள், பிற்போடப்பட்ட கொடுப்பனவில் பொருள் விற்பனை போன்றவற்றின் மூலம் மக்களைக் கடனாளகளாக்கிச் சுயசேமிப்பினை இல்லாதொழித்து நின்மதியற்றவர்களாக ஆக்கியுள்ளனர். இக்காலப்பகுதியல் நிதி நிறுவனங்களின் தோற்றம் மூலை முடுக்கெல்லாம் பரவியுள்ளன.

அண்மைக்காலமாக சிறுவர்கள், இளைஞர், யுவதிகளிடத்தில் பக்கட்டில் அடைத்த உணவுகள், புறியாணிச் சாப்பாடு, அதிக சீனி, கலரிங், காபனீரொட்சைட்டு கலந்த மென் பானங்கள், கொத்து ரொட்டி. பிறைட் றைஸ், பீச்ஸா, வரோட்டா, சிப்ஸ்கள், முகுஊ உணவுகள் மற்றும் இரசாயனம், நஞ்சு, எண்ணெய், அதித சுவையூட்டிகள் (அஜினோ மோட்டோ, சிற்றிக் அசிட், குளுக்கோமோல்ட், மசாலா தூள்கள்) ஆசணிக் நஞ்சு கலந்த அரிசி, மரக்கறி வகைகள், கல்சியம் காபைட் கலந்த பழவகைகள், கலப்படமான உணவுப் பொருள்கள் யாவற்றிலும் மௌனாயுத யுத்தம் நிலைபெற்று மக்களை நிரந்தரத் தொற்றா நோயாளிகளாக்கியுள்ளன.

இதனால் எதிர்காலத்தில் திடகாத்தரமும் ஆயுளும் குறைந்த மக்களே நாட்டில் எஞ்சி இருக்கப் போகின்றனர். பெரும்பாலானோரடத்தில் தொற்றா நோய்கள் இரத்த அழுத்தம், நீரிழிவு. சிறுநீரகப் பாதிப்பு, பித்தப்பை செயழப்பு, குழந்தைப் பேறின்மை ஆகியன அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றன..

மௌனாயுத யுத்தத்தில் ஸ்மார்ட் கைப்பேசிப் பாவனை, சமூக வலைத்தளங்களின் பெருக்கம் ஓ.டி.டி தளங்களின் பாவனை அதிகரிப்பு, தொலைத் தொடர்பு நிறுவனங்களின் கவர்ச்சியான விளம்பரங்கள், தொலைக்காட்சி, கேபிள் தொலைக்காட்சிச் சேவை. செய்மதித் தொலைக்காட்சிச் சேவை ஆகியன சிறவர். இளையோர, பெண்கள் போன்றோரை முதன்மைப்படுத்தியே சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நம்நாட்டுத் தமிழ் தொலைக்காட்சிச் சேவைகளில் ஒளிபரப்பப்படும் நெடுந்தொடர்கள், குறுந்தொடர்களில் தெய்வம், பாம்பு, பேய், பிசாசு போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட தொடர்களும் பெண்களை வில்லிகளாகக் கொண்ட தொடர்களுமே அதிகம் ஒளிபரப்பப்படுகின்றன.

இவற்றுள் பெரும்பாலானவை மூடநம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆண்களையும் பெண்களையும் தொலைக்காட்சிக்கு முன்னால் அமரச் செய்து சோம்பேறிகளாக்கிக் குடும்பச் சண்டைகளை உருவாக்குவதும் மௌனாயுத யுத்தத்தின் ஓர் அம்சமாகும்.



ஆகவே, உலகில் நடைபெறும் ஆயுத, உயிராயுத, மொனாயுத, ஊடக யுத்தங்கள் யாவும் மனித குலத்துக்குப் பேரழிவைக் கொடுப்தோடு தலைமுறை தலைமுறையான பாதிப்புக்களையும் ஏற்படுத்தி விடுகின்றன. மேற்குலகின் விஞ்ஞான, தொழினுட்பக் கண்டுபிடிப்புக்களும் இராஜதந்திர மூலோபாயங்களும் இலுமினாட்டிகளின் செயற்பாடுகளும் இந்நூற்றாண்டு முடிவதற்குள் முழு உலகையும் சிதைத்துச் சீரழிக்கப் போகின்றன.

அதிலும் மௌனாயுத யுத்தம் மக்களின் நவீன வாழ்க்கை முறையில் பட்டுக் கம்பளம் விரித்துச் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு தமது தாண்டவத்தை வெளிக்காட்டத்தான் போகின்றன




# பீப்பள்ஸ் லீசிங் இற்கு தராதர தரச்சான்றிதல்

லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி நிலைத்தன்மையை கைக்கொள்வதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி, அண்மையில் ஜெர்மனியின் கார்ல்ஸ்ருஹேவில் இடம்பெற்ற உலகளாவிய நிலைபேறான நிதிச்சேவைகள் மாநாட்டில் (GSFC), நிலைத்தன்மை தராதரங்கள் மற்றும் சான்றளிப்பு முன்னெடுப்பின் (SSCI) கீழ் ஏற்புக்கான சான்றளிப்பைப் பெற்றுக்கொண்டது.

இந்த மாநாடானது நிலைத்தன்மையான ஓர் உலகத்தை உருவாக்கிட வங்கிச்சேவை மற்றும் நிதிச்சேவையை புதுமைப்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு தனித்துவமான உலகளாவிய மன்றமாகும்.

பீப்பள்ஸ் லீசிங் இவ் விருதினை, நிலைத்தன்மை அபிவிருத்திக்கான ஐரோப்பிய அமைப்பு (EOSD) இனது தலைமை நிறைவேற்று அதிகாரியும், சர்வதேச நிலைத்தன்மை தராதரங்கள் மற்றும் சான்றளிப்புக்கான சர்வதேச சபையின் தலைவருமான அர்ஷாட் ரப் இடமிருந்து பெற்றுக்கொண்டது.

பீப்பள்ஸ் லீசிங்கின் தலைவர் பிரதீப் அமிர்தநாயகம் தெரிவிக்கையில், "பீப்பிள்ஸ் லீசிங்கில், எமது பங்குதாரர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு சிறப்பான மற்றும் பிரகாசமான ஓர் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டும் கொள்கையாக நிலைத்தன்மையை கடைப்பிடிப்பதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம். நிதிசார்ந்த வெற்றிகளைக் கடந்து பொறுப்பு வாய்ந்த வணிக நடைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் மீதான அக்கறையை நோக்கி நாம் எவ்வாறு முன்னேறுவோம் என்பதை இந்த ஏற்புக்கான சான்றளிப்பு வெளிப்படுத்துகிறது. என்றார்.




# பெண்களுக்கு வலுவூட்டும் BRANDIX

நிறுவனசார் தலைமைத்துவத்தை வெற்றிகரமாக வெளிப்படுத்தி, 2023 ஆம் ஆண்டின் பெண்களுக்கு நட்பான பணியிட விருதுகள் வழங்கும் நிகழ்வில் மிகவும் சிறந்த பெண்களுக்கு நட்பான பணியிடம் விருதை Brandix சுவீகரித்திருந்தது.

மேலும் ஒன்பது நிறுவனங்களுடன் இணைந்து இந்த விருதை Brandix பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. AICPA மற்றும் இலங்கை பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் (CIMA) ஆகியன SATYN சஞ்சிகையுடன் இணைந்து இந்த கௌரவிப்பை வழங்கியிருந்தன. பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு வலுவூட்டல் ஆகியவற்றில் டீசயனெைை காண்பிக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக இந்த கௌரவிப்பு அமைந்திருந்தது.

இலங்கையின் முன்னணி ஏற்றுமதியாளராகத் திகழும் டீசயனெைை, பெண்களுக்கு வலுவூட்டுவதற்கான சிறந்த முன்மாதிரியான நிறுவனமாக அமைந்திருப்பதுடன், ஆரோக்கியம், நிபுணத்துவ வளர்ச்சி மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றைக் கொண்ட சூழலை வழங்குகின்றது.

இலங்கையில் டீசயனெைை இன் 77% ஆன ஊழியர்கள் பெண்களாக அமைந்திருப்பதுடன், சிறந்த மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த திறமைசாலிகளில் 27% ஆனவர்கள் பெண்களாக அமைந்துள்ளனர்.

மேலும், நிறுவனத்தின் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களில் சுமார் 40% ஆன பெண்களின் பங்கேற்பு காணப்படுவதுடன், பணிப்பாளர் சபை மட்டத்தில் 17% ஆனவர்கள் பெண்களாகவும் அமைந்துள்ளனர்.

# சிறுவர்களுக்கான மகரந்த சேர்க்கை பற்றிய நிகழ்வு

அன்புடன் அரவணைக்கும் வங்கியின் சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் டிக்கிரி, அண்மையில் வனவிலங்குகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு சமூகத்துடன் (றுளேு) இணைந்து மகரந்தச் சேர்க்கையின் பிரமிப்பான செயன்முறை பற்றிய அறிவினை சிறுவர்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்ட சுவாரஸ்யமான ஓர் ஒன்லைன் நிகழ்வினை ஒழுங்கமைத்திருந்தது.

இந்த விசேட நிகழ்வானது ஜூன் 17 ஆம் திகதி நடைபெற்றதோடு, றுளேு உடன் இணைந்துள்ள சிறுவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக அமைந்தது. அத்துடன், அனைத்து ஏனைய சிறுவர்களுக்கும் இந்த நிகழ்வில் பங்கேற்கும் அனுமதி வழங்கப்பட்டதோடு, மகரந்தச் சேர்க்கையின் கண்கவர் உலகிற்குள் நுழையும் வாய்ப்பை அவர்கள் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது மகரந்தச் சேர்க்கையின் எண்ணக்கரு பற்றிய ஆர்வத்தைத் தூண்டும் ஓர் அறிமுகத்துடன் ஆரம்பமானதோடு, தொடர்ந்து மகரந்தங்களின் பரிமாற்றம், மகரந்தக்காவிகளின் அத்தியாவசியப் பங்கு, இந்த முக்கியத்துவமான உயிரினங்களைக் கவர்வதற்காக தாவரங்கள் பின்பற்றும் வழிமுறைகள், மற்றும் சூழற்தொகுதிக்கு ஏன் மகரந்தச்சேர்க்கை இன்றியமையாதது பற்றிய ஆய்வு போன்ற விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

இந்த இடைத்தொடர்புடனான அமர்வில் புவியில் உயிர்களின் தொடர்ச்சிக்கு அத்தியாவசியமான இச்செயன்முறை பற்றிய மிகுந்த அறிவை சிறுவர்கள் பெற்றுக்கொண்டனர்.

# YES Investment Plan அறிமுகம்




ஆகஸ்ட் 12 ஆம் திகதி கொண்டாடப்பட்ட சர்வதேச இளைஞர் தினத்தை அனுஷ்டிக்கும் வகையில், "Onwards with Green Banking" (பசுமை வங்கிச்சேவையுடன் முன்னோக்கி) என்ற கருப்பொருளுக்கு அமைவாக அறிமுகப்படுத்தப்பட்ட YES Digital Green Savings Account என்ற டிஜிட்டல் பசுமை சேமிப்புக் கணக்கின் மூலம் மக்கள் வங்கி பல்வேறு நன்மைகளை வழங்குகிறது.

இந்த நிகழ்வைக் குறிக்கும் விசேட வைபவம் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோரின் தலைமையில் கொழும்பு 02 இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் தலைமையகக் கிளையில் அண்மையில் இடம்பெற்றது.

"YES Executive Premier Plan" என்ற பெயரிலான முதலீட்டுத் திட்டத்தின் அறிமுகமும் நிகழ்வில் இடம்பெற்றதுடன், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் டெஸ்ட் அணித்தலைவர் மார்வன் அத்தபத்து மற்றும் தற்போதைய டெஸ்ட் அணியின் துணைத் தலைவர் தனஞ்சய டி சில்வா ஆகியோருக்கு முதலீட்டுத் திட்டங்கள் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன.

இது தவிர, நிலைபேண்தகு செயல்திட்டங்களுக்காக பிரத்தியேகமாக வழங்கப்படும் பசுமை மின்வலு கடன் திட்டமும் (Green Power Loan Scheme) அறிமுகப்படுத்தப்பட்டது.

# Next Champஇன் இரண்டாம் கட்டம்



Crysbro சுமார் அரை தசாப்தங்களுக்கு முன்னர் "Next Champ" பற்றிய சிந்தனையை உருவாக்கியது, ஆனால் அது 2019 இல் மேூஊ ளுடு இன் பிரவேசத்துடன் முழு அளவிலான கனிஷ்ட தடகள செயற்பாடாக உருவெடுத்தது - CRYSBRO Next Champ முன்முயற்சியானது, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வழங்குவதாக உறுதியளித்த இருபது புதிய இளம் விளையாட்டு வீரர்களுக்கு இந்த திட்டம் வழியமைத்தமை குறிப்பிடத்தக்கது.

உண்மையில், முதல் கட்டத்தின் முடிவில், எதிர்பார்க்கப்பட்ட அளவு சாதகமான விளைவை அளித்தது என்பதை நிரூபித்தது, மேலும் விளக்கத்தின் போது நாம் விவரங்களைப் பற்றி ஆழமாகப் பேசுவோம்.

இப்போது, முந்தைய பதிப்பின் வெற்றி மற்றும் உயர்-சாத்தியத்தைத் தொடர்ந்து, NOC Sri Lanka - CRYSBRO Next Champ திட்டத்தின் இரண்டாம் கட்டம், கிராமப்புறங்களில் வசிக்கும் இலங்கையின் இளம், அர்ப்பணிப்பு மற்றும் சுறுசுறுப்பான திறமைசாலிகள் மீது மீண்டும் ஒரு தகுதியான ஒளியைப் பிரகாசிக்கச் செய்துள்ளது.

நாட்டின், இம்முறை இலங்கையின் கிராமப்புற சமூகங்கள் முழுவதிலும் உள்ள நம்பிக்கைக்குரிய விளையாட்டு வீரர்களைக் கொண்ட 13 பேர் பட்டியலில் அடங்குகின்றனர்.




# அடுத்த தலைமுறை தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்தும் SPARK 2023 Bootcamp

சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து, ஆகஸ்ட் 7 ஆம், 8ஆம் திகதிகளில் முதல் 35 போட்டியாளர்களுக்கு ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் SPARK Bootcamp நிகழ்வானது , புதிய அணுகுமுறையில் வித்தியாசமான அனுபவத்தை பெறக்கூடிய வகையில் தொழில்முனைவோர் பயிற்சியை ஏற்பாடு செய்திருந்தது.

15 மற்றும் 24 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களின் தொழில் முயற்சிக்கான ஊக்கத்தை , மாற்றியமைப்போர், சிந்தனையாளர்கள், பிரச்சனைகளைத் தீர்ப்பவர்கள் மற்றும் படைப்பாளிகள் மத்தியில் தூண்டுவதை ஸ்ரீயுசுமு நோக்கமாகக் கொண்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள ஆர்வமுள்ள இளம் தொழில்முனைவோரால் சமர்ப்பிக்கப்பட்ட ஏராளமான விண்ணப்பங்களைத் தொடர்ந்து, 105 பட்டியலிடப்பட்ட போட்டியாளர்கள் தொழில்முனைவோர் தொடர்பான முக்கிய தலைப்புகளில் இணையத்தளம் ஊடாக பயிற்சிகளைப் பெற்ற பின்னர் அவர்கள் வணிக முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர்.

ஆகஸ்ட் 21 ஆம் தேதி நடைபெறும் இறுதிப்போட்டியில் பங்கு பெறுவதற்கான மதிப்பீடு மற்றும் தெரிவு செயல்முறை மூலம் முதல் 35 போட்டியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். புத்தாக்கங்கள் நிறைந்த இந்த Bootcamp நிகழ்வானது வணிகத் திட்டமிடல், மாறும் சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் பயனுள்ள தொழில்முயற்சி நுட்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான பாடத்திட்டத்தை வழங்கியது.

மேலும் bootcamp ஆனது திறன்களை மேம்படுத்தும் சாதகமான ஒரு சூழலில் கூட்டுப் பயிற்சிகள் மூலம் தங்கள் திறமைகளை வளர்த்து கொள்ளல், நவீன கற்றல் முறைகள் பெறுவதட்கான வாய்ப்பாக அமைந்தது. SPA Ceylon இன் இணை நிறுவனர், பிரதம நிறைவேற்று அதிகாரி ஷாலின் பாலசூரிய, மற்றும் Good Market இன் இணை நிறுவனர் அச்சலா சமரதிவாகர உட்பட தொழில்துறையில் முன்னணியில் உள்ள நிபுணர்கள், வணிக ஆலோசகர்கள் மற்றும் தொழில்முனைவோர்களி அனுபவ பகிர்தல், வழிகாட்டுதல் அமர்வுகள் மூலம் தங்கள் வணிக யோசனைகளை மேம்படுத்தும் வாய்ப்பைப் பங்கேற்பாளர்கள் பெற்றனர்.

# Adobe உடன் கைகோர்க்கும் Redington



"Redington இல், எமது தனித்துவமான தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் கூட்டாண்மைகளின் கலவை மூலம் அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்த சந்தைகளுக்கு

இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பூட்டான் உட்பட தெற்காசியாவில் உள்ள முக்கிய சந்தைகளில் யுனழடிந இன் பிரத்தியேக விநியோகம் மற்றும் சந்தை மேம்பாட்டு கூட்டாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக ஒரு முன்னணி தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான சுநனைபெவழெ (ளுநு: சுநுனுஐபேவுழுநு) இன்று அறிவித்துள்ளது.

அதன்படி, இந்த கூட்டாண்மையானது யுனழடிந இன் ஆக்கபூர்வமான மற்றும் டிஜிட்டல் பணிப்பாய்வு மென்பொருள் கருவிகளுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம், பிராந்தியம் முழுவதும் படைப்பாற்றலைத் தூண்டுவதையும் டிஜிட்டல் வலுவூட்டலை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இடையேயான தொழில்நுட்ப இடைவெளியை நீக்குவதற்கும், டிஜிட்டல் இடைவெளியை போக்குவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம்," என்று சுநனைபெவழெ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ரமேஷ் நடராஜன் அவர்கள் குறிப்பிட்டார்.

"யுனழடிந உடனான எமது ஒத்துழைப்பு இந்த அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். மேலும், எங்கள் விரிவான கூட்டாளர் வலையமைப்பு மற்றும் டிஜிட்டல் விநியோக தளங்கள் மூலம் டிஜிட்டல் யுகத்தில் வெற்றிபெற தேவையான புத்தாக்கமான மற்றும் வலுவான கருவிகள் மூலம் வணிகங்கள் மற்றும் தனிநபர்களை வலுவூட்டுவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.




# 22ஆவது SLIM Brand Excellence விருதுகள் ஆரம்பம்!

SLIM Brand Excellence கடந்த பல வருடங்களாக வெற்றிகரமான சந்தைப்படுத்தல் முயற்சிகள் மற்றும் குறிப்பிடத்தக்க வர்த்தகநாம கதைகளுக்கான அங்கீகாரத்தை வழங்கி, நாட்டின் உயர்ந்த சாதனைகளைக் கொண்டாடி வருகிறது.

SLIM அண்மையில் இந்த நன்மதிப்புக்குரிய விருது விழாவின் புத்தம் புதிய தொகுப்பை, 'Logic Behind the Magic' என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெற்ற ஒரு பிரமாண்டமான வெளியீட்டு விழாவில் அறிமுகப்படுத்தியது.

வலுவான வர்த்தகநாமங்களை உருவாக்குவதில் மூலோபாயங்களுடன், புத்தாக்கத்தை இணைப்பதன் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் இந்த கருப்பொருள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

SLIM இன் தலைவர் சிந்தக பெரேரா இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், "இந்த சகாப்தத்தில், திறமையான வர்த்தகநாம முகாமைத்துவமானது பகுப்பாய்வுகள் நம்பகத்தன்மையை சந்திக்கும் தரவு நுண்ணறிவு மற்றும் விசுவாசத்திற்கான உணர்வுபூர்வமான ஒத்திசைவினை சமநிலைப்படுத்துகிறது. மாற்றங்களுக்கு மத்தியில், திறமையான முகாமைத்துவம் என்பது தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. என்றார்.

# Arpico Insurance இன் புதிய தலைவராக ரமல் ஜாசிங்க

Arpico Insurance PLC, அதன் நிறைவேற்று அதிகாரமற்ற தலைவராக ரமல் ஜாசிங்கவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த நியமனம் ஜுலை 5, 2023 முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளதுடன் பல வருடங்களாக முல்லுல்ல தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்றதையடுத்து பல வருடங்களாக விவில் பெரேராவு இந்த பதவியை வகித்ததற்கு பிறகு அந்த பதவிக்கு ஜாசிங்க தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தனது சமீபத்திய பதவி குறித்து கருத்து தெரிவித்த ரமல் ஜாசிங்க, "குழுமத்தின் தலைவர் கலாநிதி சேன யத்தேஹிகே மற்றும் Richard Pieris & Company PLC ஆகியோருடன் இணைந்து பணியாற்றுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

குறிப்பாக எனது சகாவான கலாநிதி கெலும் சேனாநாயக்கவுடன் மீண்டும் பணியாற்றுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நிறுவனம் மேலும் வளர்ச்சிக்கு பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் மீதும் அவர்களின் உயர்ந்த திறன்கள் மீதும் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்தார்.

# கதிரைகள் அன்பளிப்பு





SUHAIR HAJJ TRAVELS நிறுவனத்தினால் வியாழக்கிழமை 24/08/2023 தர்கா நகர் அல்ஹம்றா மஹா வித்தியாலயத்தின் வாசிகசாலைக்கு (LIBRARY) 25 பிளாஸ்டிக் கதிரைகள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

இக்கதிரைகளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியார் பாடசாலை அதிபர் ஹாஜியானி குபஸ்லியா ஸஹ்ரானிடம் கையளிப்பதையும் SUHAIR HAJJ TRAVELS நிறுவனத்தின் அதிபர் தேசபந்து அல்ஹாஜ் ஏ.பீ. எம்.ஸுஹைர் ஜே.பி. முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நபீல் நஸீர், பாடசாலை பழைய மாணவர் சங்க பொருளாளர் குபஸீன் குபாருக், பாடசாலை பிரதி அதிபர் அல்ஹாஜ் ரிஸான் மஃரூப், உபஅதிபர் குபரூஜா ஸகீல் ஆகியோரும் மேற்படி வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.



# சிறந்த விற்பனையாளர்களுக்கான அங்கீகாரம்

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான அலியான்ஸ் லங்கா, 2023 ஆம் ஆண்டு ஜுலை 21 ஆம் திகதி நடைபெற்ற பிரத்தியேகமான பாராட்டு விழாவில் அதன் மிகச் சிறந்த தனிநபர் விற்பனைப் பணியாளர்களை பெருமையுடன் கொண்டாடி, கௌரவித்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விற்பனை இலக்குகளைத் தாண்டி நிகரற்ற அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டை வெளிப்படுத்திய அலியான்ஸ் மில்லியனர்கள் கழகத்தின் அதிசிறந்த சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2021 இல் நிறுவப்பட்ட அலியான்ஸ் மில்லியனர்கள் கழகம், நிறுவனத்தின் விற்பனை ஆளணியின் மிகச் சிறப்பான முயற்சிகளை அங்கீகரித்து, பாராட்டுவதற்கான ஒரு மதிப்புமிக்க தளமாக செயல்படுகிறது. இந்த ஆண்டு விழா, வஸ்கடுவவில் உள்ள சிட்ரஸ் என்ற ஆடம்பர ஹோட்டலில் ஒரு இரவு தங்குவதற்கான ஏற்பாட்டையும் உள்ளடக்கியிருந்ததுடன், இந்த உயர் சாதனையாளர்களுக்காக மறக்க முடியாத நினைவாக, முதல்முறையாக இவ்வாறு வெளியில் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அலியான்ஸ் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இலங்கைக்கான முகாமையாளரான அலன் ஸ்மி, பிரதம விநியோக அதிகாரி ரங்க டயஸ், தேசிய விற்பனைத் தலைவர் ஜயநாத் அல்விஸ், தனிநபர் விற்பனைத்துறை தலைவர் பிரசன்ன கொடிகார மற்றும் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி கசுன் யட்டவர ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.



# ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் செலான் இணைவு

செலான் வங்கியானது, தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் மூலோபாய பங்கான்மை ஒன்றை ஏற்படுத்தியதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதித் துறையை ஊக்குவிப்பதற்கான முக்கிய அடியொன்றை எடுத்து வைத்தது.

இந்த இணைந்த முயற்சியானது நாட்டின் உள்நாட்டு உற்பத்திகளை சர்வதேச சந்தையில் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள அதேவேளை அனுபவமிக்க ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஆர்வமிக்க தொழில் முயற்சியாளர்கள் என இரு தரப்பினருக்கும் விரிவான நிதித்தீர்வுகளையும் ஒத்துழைப்பையும் தனது நுஓிழசவ நுஓிநசவ சேவையின் ஊடாக வழங்குவதற்கு எதிர்பார்க்கிறது.

செலான் வங்கியின் பணிப்பாளர் ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர மற்றும் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி ஷிஹாம் மரிக்கார் ஆகியோர் இரு அமைப்புகளையும் சேர்ந்த ஏனைய பிரதிநிதிகளின் முன்னிலையில் இந்த உறுதிப்பாட்டை வலியுறுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த மூலோபாய இணைப்பின் துணையோடு, செலான் வங்கி மற்றும் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம் என்பன இலங்கையின் ஏற்றுமதி சந்தையின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்திட, பொருளாதார சுபீட்சத்தை மேம்படுத்திட மற்றும் சிறப்பான நிதியறிவினை நோக்கி தேசத்தை முன்கொண்டு சென்றிட உறுதி பூண்டுள்ளனர்.

# Airtel Fastestகளுக்கு வாழ்த்து

இளைஞர்களால் மிகவும் விரும்பத்தக்க தொலைத்தொடர்பு நிறுவனமான எயார்டெல் ஸ்ரீலங்கா, லங்கா பிரீமியர் லீக்கில் (LPL) கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்கு சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட Airtel Fastest போட்டியின் இறுதிப் போட்டியில் தெரிவான வீரர்களுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

Airtel Fastest போட்டியில் தனது தனித்துவமான Sling-Bowling Actionஆல் ஒட்டுமொத்த வெற்றியாளராக தெரிவான Eshan Malinga மற்றும் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு தெரிவான சுயவாயெசயதய Thenurathan ஆகிய இருவரும் முறையே Colombo Strikers மற்றும் Jaffna Kings அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்டனர்.

Airtel Sri Lanka's Fastest ஆனது 2019 பெப்ரவரியில் ஆரம்பமானது, ஆரம்ப தேர்வுக்கு நாடு முழுவதும் 11 மாவட்டங்களில் இருந்து 10,000 பங்கேற்பாளர்கள் போட்டியில் கலந்து கொண்டனர்.

145 பந்து வீச்சாளர்களைக் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவுடன், இந்த வேகப்பந்து வீச்சாளர்களின் முழு திறனையும் வெளிப்படுத்த 360 பாகை அணுகுமுறையை வலியுறுத்தும் அதே வேளையில் போட்டி அதன் வெவ்வேறு நிலைகளில் முன்னேறியது.

# அமானாவின் WhatsApp வங்கிச் சேவை அறிமுகம்



சௌகரியமான மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய தீர்வுகளை வழங்குவதற்கான தமது அர்ப்பணிப்பின் பிரகாரம், அமானா வங்கியினால், WhatsApp வங்கிச் சேவைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இந்த புதிய சேவை வழங்கலுடன், வாடிக்கையாளர்களுக்கு தமது கணக்கு மீதிகளை வங்கியின் WhatsApp இலக்கமான 070 7756 756 இல் 'Hi' என டைப் செய்து அனுப்பி அறிந்து கொள்ள முடியும்.

உள்ளடக்கமான வங்கியியல் அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் பல மொழிகளில் உதவிச் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான முறையில் தமது கணக்கு மீதிகளை தமது பதிவு செய்து கொண்டுள்ள மொபைல் இலக்கத்தினூடாக அறிந்து கொள்ள முடியும்.

இவற்றில் சேமிப்புக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், சிறுவர் சேமிப்புகள், தவணை வைப்புக் கணக்குகள் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை மற்றும் கூட்டாண்மைக் கணக்குகள் போன்றன உள்ளடங்குகின்றன.

ஒன்றுக்கு மேற்பட்ட கணக்கை கொண்டிருந்தாலும் தமது கணக்குகளை பற்றி உடனுக்குடன் அறிந்து தமது நிதிசார் திட்டமிடல்களை இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இந்தச் சேவை கிடைப்பதுடன், அமானா வங்கியின் WhatsApp வங்கிச் சேவை உச்ச கட்ட பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவதுடன், நியம OTP உறுதிப்படுத்தல், பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. இதனூடாக அங்கீகாரமற்ற தகவல் அணுகல்கள் தவிர்க்கப்படுகின்றன.



# Prime Lands தங்க விருது

இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான, Prime Lands, 2020 ஆம் ஆண்டில் முதன் முறையாக கூட்டாண்மை பிரிவில் தங்க விருதை சுவீகரித்திருந்ததையடுத்து, இரண்டாவது தடவையாகவும், அதன் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.primelands.lkக்கு, 13ஆவது ஞூளைவறுநடி.டம 2023 போட்டியில் தங்க விருதை சுவீகரித்துள்ளது.

ஆகஸ்ட் 9ஆம் திகதி Imperial Monarch இல் கோலாகலமாக நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வில் இந்த விருது Prime Lands க்கு வழங்கப்பட்டது. இதில் முன்னணி டிஜிட்டல் புத்தாக்க செயற்பாட்டாளர்கள் மற்றும் தூர நோக்க செயற்பாட்டாளர்கள் ஒன்றுகூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொருளடக்கத்தின் புத்தாக்கத்திறன், கிராபிக் வடிவமைப்பின் தரம், கலையம்சம், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் BestWeb.lk விருதுக்காக மீளாய்வு செய்யப்பட்டிருந்தது.

இந்த சாதனையினூடாக, Prime Land இன், டிஜிட்டல் மேம்படுத்தல் சிறப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, இணையத்தளத்தின் வடிவமைப்பு மற்றும் செயற்பாடு மற்றும் உறுதியான இணைய பிரசன்னம் ஆகியன உறுதி செய்யப்பட்டுள்ளன.

# மஞ்சிக்கு BRC AA+ சான்றிதழ்




தெற்காசியாவில் உணவு உற்பத்தித் துறையின் முன்னணியாளராகத் திகழும் CBL மஞ்சி, உணவுப் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பரிசளிக்கப்படும் Brand Reputation through Compliance Global Standards (BRCGS) AA + 10 சான்றிழ் அளிக்கப்பட்ட பிஸ்கட் உற்பத்தி நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டு சிறந்த வெற்றியை அடைந்துள்ளது.

BRC AA+ சான்றிதழ் கடுமையான பலவிடயங்களை உள்ளடக்கிய தரங்களுடன் கூடியது என்பதுடன், இதற்கு உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் காணப்படுவதுடன், உணவு தொழில்துறையில் உயர்ந்த கௌரவத்தையும் கொண்டுள்ளது.

இந்தச் சான்றிதழைப் பெறுவதன் ஊடாக பெருமளவான வாடிக்கையாளர்கள் அதிகரிப்பதுடன், உணவு மற்றும் உற்பத்தி உறுதிப்படுத்தலுக்காக உணவு உற்பத்தித் தொழில்துறையினால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த தரத்தின் கீழ், கடுமையான உணவுப் பாதுகாப்பு நடைமுறையைப் பேணுவதற்கு நிறுவனம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை இது எடுத்துக் காட்டுகிறது.



# எரிசக்தி உற்பத்தி முயற்சி

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முன்னணியில் திகழும் WindForce PLC ஆனது இலங்கையின் முன்னணி சுயாதீன மின் உற்பத்தியாளரான (Independent Power Producer - IPP) Lakdhanavi மற்றும் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்த முதலீட்டு நிறுவனமான The Blue Circle ஆகியவற்றுடன் இணைந்து, ஒரு கூட்டு வர்த்தக முயற்சியை முன்னெடுக்கவுள்ளது.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை மாற்றியமைக்கும் வகையிலான மின் உற்பத்தித் திட்டத்தில் காலடியெடுத்து வைப்பதே இதன் நோக்கம். இந்த இலட்சிய நோக்கம் கொண்ட திட்டம், இலங்கை மின்சார சபையால் (ஊநுடீ) இதுவரை அனுமதிக்கப்பட்ட மிகப் பெரிய தனியார் துறை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி முயற்சியாக உள்ளதுடன், இதன் மொத்த நேரடி முதலீடு 152 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், 2025 டிசம்பரில் இச்செயல்த்திட்டம் நிறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் திட்டம் மின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் பரிமாற்றம் ஆகியவற்றை இணைக்கும் இலங்கையின் முதலாவது ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி, இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் WindForce இன் ஸ்தானத்தை உறுதிப்படுத்தும் வகையில், 100 மெகாவாட் (100 ஆறு) சூரிய மின் உற்பத்தி நிலையம், மணித்தியாலத்திற்கு 12 மெகாவாட் (12 ஆறுர) மின்கல எரிசக்தி சேமிப்பு அதிநவீன கட்டமைப்பு (Battery Energy Storage System - BESS), 2x63.5MVA, 132/33kV கொண்ட தேசிய மின்விநியோகத்திற்கான துணை மின்நிலையம், மற்றும் ஒரு விரிவான 27km, 132/33kV பரிவர்த்தனை இணைப்பு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு திட்டமாக இந்தத் திட்டம் அமைக்கப்படும்.



# நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் BCI Campus

"கல்வியை மாற்றுதல் மற்றும் எதிர்காலத்தை வடிவமைத்தல்" என்ற நோக்கத்தில் கல்விசார் திறமையை வெளிப்படுத்தும் வகையில் கல்வியை மறுவரையறை செய்ய நீர்கொழும்பில் 'கிறிஸ்துதகிங்' என்ற நவீன தொழில்நுட்பத்துடனான கட்டடத்தை BCI Campus அண்மையில் திறந்துவைத்தது.

பெனடிக்ட் xvi உயர் கல்விக்கான சர்வதேச நிறுவனம் என அங்கீகரிக்கப்பட்ட BCI Campus இன் புதிய வசதியை அங்கீகரிப்பு செய்யும் நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு மறைமாவட்ட பேராயரும், BCI இன் நிறுவுனருமான மதிப்பிற்குரிய கருதினால் மல்கம் ரஞ்சித் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கொழும்பு துணை ஆயர் மதிப்பிற்குரிய கலாநிதி ஜே.டி.அந்தோனி கலந்துகொண்டார்.

BCI பிரதான கல்விசார் கட்டடத்துக்கான பிரதான அனுசரணை வழங்கிய கல்சடோனியா குழுமத்தின் தலைவர் கலாநிதி வெரோனசி மற்றும் அவருடைய பிரதிநிதிகள், இத்தாலியிலுள்ள புலம்பெயர் இலங்கையர்களின் தேசிய ஒருங்கிணைப்பாளர் வணக்கத்துக்குரிய நெவில்ஜோ பெரேரா, BCI இன் ஆட்சிக் குழு மற்றும் கல்விசார் செனட்டின் உறுப்பினர்கள், மேற்கு கடற்படைப் பிரிவின் கொமாண்டர் ரியர் அட்மிரல் சுரேஷ்.த சில்வா, இலங்கை கடற்படையின் சிவில் பொறியியல் துறையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஹிரான் பாலசூரிய, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தினேஷ் வீரக்கொடி, வயம்ப பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் உதித் ஜயசிங்க முதலிகே, அருகிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அமைச்சின் அதிகாரிகள், BCI இன் கல்விசார் மற்றும் கல்விசார் பணியாளர்கள், BCI மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.






# DFCC வங்கியின் மேம்படுத்தப்பட்ட குத்தகை

DFCC வங்கியின் குத்தகை சேவைப் DFCC Leasing, "காலம் செல்லச் செல்ல சிறந்ததாக மாறும் குத்தகை" தீர்வாகவுள்ள "Aduwenakota Aduwena Leasing" என்ற தனது விசேட குத்தகை ஊக்குவிப்பின் மூலமாக சந்தையில் மோட்டார் வாகனங்களுக்கு இலங்கை மக்கள் மத்தியில் காணப்படும் அக்கறைகளுக்கு ஒரு தைரியமான மற்றும் புத்தாக்கமான அடியை முன்னெடுத்து வைத்துள்ளது.

2023 செப்டெம்பர் 14 வரை, குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கிடைக்கும், DFCC Aduwenakota Aduwena குத்தகையானது வாடிக்கையாளர்களுக்கு வாகனங்களின் விலை வீழ்ச்சியடைகின்ற போது அல்ல

புதிய வானங்களின் இறக்குமதி செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுகின்ற போது, வட்டி வீதங்கள் குறைக்கப்படும் வரை காத்திராது, இப்போதே வாகனத்தைப் பெற்றுக்கொள்ள இடமளிக்கிறது.

ஏனெனில், DFCC Aduwenakota Aduwena குத்தகையானது, ஒரு வருடத்திற்குப் பின்பும் கூட எவ்விதமான தண்டப்பணமும் இன்றி உங்களுடைய தற்போதைய வாகனத்திற்கு பதிலாக தரமுயர்ந்த வாகனமொன்றைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், குறைந்த வட்டி வீதத்திற்கு மாறும் நெகிழ்வுத்தன்மையை அனுபவிக்க உங்களுக்கு இடமளிக்கிறது.

இப்போது, இலங்கையில் வேறு எந்த குத்தகை வசதியும் வழங்காத நெகிழ்வுத்தன்மையாக இது காணப்படுவதுடன், வாகனமொன்றை சொந்தமாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற உங்கள் கனவுகளை இப்போதே நனவாக்கிக் கொள்ளவும், எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் மிகவும் சாதகமான சந்தை நிலைமைகளில் இருந்து நீங்கள் பயனடையவும் உங்களுக்கு இடமளிக்கிறது!

# SLTஇன் நிதிப் பெறுபேறுகள் வெளியீடு

நடப்பு ஆண்டின் இரண்டாம் காலாண்டில் SLT PLC இனால் 2.4% (ரூ. 400 மில்.) வருமான வளர்ச்சி பதிவாகியிருந்த நிலையில், மொபிடெல் 9.3% (ரூ. 1,066 மில்.) சரிவை பதிவு செய்திருந்தது.

எனவே, குழுமத்தின் வருமானம் 2.8% (ரூ. 763 மில்.) இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. SLT PLC வருமான அதிகரிப்பில் புரோட்பான்ட், ஜீவுஏ மற்றும் நிறுவனசார் வருமான மூலங்கள் பங்களிப்பு செய்திருந்தன.

எவ்வாறாயினும், சர்வதேச இடம்மாற்று வருமானம் 90.3% (ரூ. 614 மில்.) குறைவடைந்தமை காரணமாக இந்த அதிகரிப்பும் குறைந்திருந்தது. சர்வதேச இடம்மாற்று வருமானம் என்பது எவ்விதமான எல்லைப் பெறுமதிகளையும் கொண்டிருக்காது என்பதை குறிப்பிட வேண்டும்.

SLT PLC வருமான வளர்ச்சி பிரதானமாக, ஃபைபர் வலையமைப்பு



மற்றும் வாடிக்கையாளர் வெளியேற்றம் போன்றவற்றினால் தாமதமடைந்தது. மொபிடெல் வருமான வீழ்ச்சியில், வாடிக்கையாளர் இருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி பங்களிப்புச் செய்திருந்தது.

ஜூன் 2022 முதல் 2023 ஜூன் வரையான காலப்பகுதியில் வாடிக்கையாளர் இருப்பு 1 மில்லியனினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

SLT குழுமத்தின் தொழிற்பாட்டு செலவுகள், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் 15.1% இனால் (ரூ. 2,513 மில்.) அதிகரித்திருந்தது. மொபிடெல் வருமானம் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைந்தாலும், தொழிற்பாட்டு செலவுகள் 30.4% இனால் (ரூ. 1,998 மில்.) அதிகரித்திருந்தது. விற்பனைகளுடன் தொடர்புடைய தரகுகளினால் இரண்டாம் காலாண்டில் அதிகளவு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தன.

SLT PLC தொழிற்பாட்டு செலவுகள் 5.5% இனால் (ரூ. 619 மில்.) அதிகரித்திருந்தது. இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கம், மின்சாரக் கட்டண அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலைகள் அதிகரிப்பினால் ஏற்பட்ட AMC/license செலவுகள் இதில் பங்களிப்பு செய்திருந்தன.



# புத்தளத்தில் சியபத பினான்ஸ் கிளை

புத்தளத்தில் புதிதாக திறக்கப்பட்ட மற்றுமொரு கிளையுடன் இலங்கையில் ஒப்பற்ற சேவைகள் மற்றும் நிதி தீர்வுகளை வழங்குவதன் அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க எல்லையை சியபத பினான்ஸ் எட்டியுள்ளது. இவ்விரிவாக்கம், வாடிக்கையாளர்களுக்கு பரந்த சேவையை வழங்கும் தொடர்ச்சியான முயற்சியில் ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கின்றது.

புத்தளம், ஜெயமாவத்தை, குருநாகல் வீதி, இலக்கம் 113ஃ1யு இல் அமைந்துள்ள புதிய கிளையை சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு.ஆனந்த செனவிரத்ன, பிரதேச செயலாளருடன் இணைந்து திறந்து வைத்தார்.

புதிய கிளையின் ஸ்தாபனம் மற்றும் சியபத பினான்ஸின் 18வது ஆண்டு நிறைவும் ஒரே தருணத்தில் இடம்பெற்றிருப்பது, இலங்கை மக்களுக்கான நிதிச் சேவைகள் வழங்குவதை மேலும் உறுதிசெய்து, அவர்களின் எதிர்பார்ப்பை விரிவுபடுத்துவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.